[2002 ஏப்ரல் 22

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குமாரதாஸ், ஒன்று வேளாண்மைத் துறை அமைச்சருக்கும், ஒன்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருக்கும் கேள்வி போட வேண்டும்.

வினா எண் 196, திருமதி தமிழ்மொழி ராஜதத்தன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

196—

மாணவர் விடுதி

***6294—திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி ஊராட்சி ஒன்றியம், நல்லான்பிள்ளைபெற்றாள் அரசு உயர்நிலைப் பள்ளியில் பிற்படுத்தப்பட்ட மாணவருக்கான தங்கும் விடுதி அமைக்க நடப்புக் கல்வி ஆண்டில் அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கழகக் காவல் தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, தனியார் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளுக்குப் போதிய அடிப்படை வசதிகளுடன் அரசின் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கும், அரசின் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளுக்கு போதிய அடிப்படை வசதிகள் செய்வதற்கும் அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டுமென்பதாலும் தற்போதைய நிதிநிலையைக் கருத்திற்கொண்டும், விழுப்புரம் மாவட்டம், செஞ்சி ஊராட்சி ஒன்றியம், நல்லான்பிள்ளைபெற்றாள் உயர்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி தொடங்க தற்போது இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2002 ஏப்ரல் 22]

என்னுடைய மேல்மலையனூர் தொகுதி முழுமையாக கிராமங்கள் நிறைந்த பகுதி. கிராமப்புறங்களுக்கும் முக்கியத்துவம் தரவேண்டும். கிராமப்புற கல்விக்கும் முக்கியத்துவம் தரும் அம்மா அவர்களினுடைய அரசு என்னுடைய தொகுதிக்குட்பட்ட நல்லான்பிள்ளைபெற்றாள் அரசு உயர்நிலைப் பள்ளி மாணவ மாணவியரின் நலனைக் கருத்தில் கொண்டு பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான தங்கும் விடுதி அமைப்பதற்கு வரும் நிதியாண்டிலாவது அரசு பரிசீலனை செய்ய வேண்டுகிறேன். அதேநேரத்திலே இந்த விடுதிகளைத் தொடங்குவதற்கு என்னென்ன விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன். விழுப்புரம் மாவட்டத்திலே ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியாக எத்தனை விடுதிகள் உள்ளன என்பதையும் தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினருக்கான 11 விடுதிகளும், மிக பிற்படுத்தப்பட்டோர் நல வகுப்பினருக்கான 32 விடுதிகளும் ஆகமொத்தம் 43 விடுதிகள் இயங்கி வருகின்றன என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஒவ்வோர் ஆண்டும் பகுதி-2 திட்டத்தின்கீழ் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களின் பரிந்துரையின்படி, புதிய விடுதிகள் திறக்க இடங்களைத் தேர்வு செய்யும்போது அருகிலுள்ள உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி மற்றும் கல்லூரிகள், மேற்படி கல்வி நிலையங்களில் பயிலும் மாணவ மாணவிகளில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மாணவ மாணவிகள் போதிய எண்ணிக்கையில் உள்ளனரா, மற்றும் விடுதி தொடங்க அனைத்து வசதிகளுடன் கூடிய கட்டடங்கள் கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் உள்ளனவா என்பதையும் மேலும் இந்த வட்டாரத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் விடுதிகள் இரண்டுக்கு மேல் இருந்தால், கூடாது என்றும், 8 கி.மீ. சுற்று வட்டாரத்தில் ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகிய வகுப்பினருக்கு, ஒரே பாலினத்தவருக்கு முன்னதாகவே விடுதிகள் இருப்பின் அப்பாலினத்தவர்களுக்கு புதிய விடுதிகள் தொடங்கப்படக்கூடாது என்பதன் விதிமுறையின் அடிப்படையில் இடங்கள் சீர் செய்யப்படுகின்றன. மேலும் இடம் தெரிவு செய்தபின், பொதுப் பணித் துறை மூலமாக அந்தக்

கட்டடங்களைக் கட்ட ஹட்கோ மூலமாக அதிகப்படியான நிதி ஒதுக்கப்படும் என்பதை இந்தநேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி டி. யசோதா.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியில் 12 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையைச் சேர்ந்த மாணவர்களுக்காக தங்கும் விடுதி அமைக்கப்படுகிறது. அதற்கு மேற்கொண்டு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலமாக கிட்டத்தட்ட 19 இலட்சம் ரூபாய்க்கு மேலாக பல விடுதிகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது. சில இடங்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அப்படியென்றால், இது பரவலாகக் கொடுக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகப்படியான நிதி ஹட்கோ மூலமாக ஒதுக்கப்படும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, அதுபோன்று ஒதுக்கப்படாத இடங்கள் யாவை என்று உறுப்பினர் அவர்கள் எங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தால், கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 197, திருமதி மல்லிகா சின்னசாமி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

197—

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தொழில்நுட்பப் பயிற்சிக்கூடம்

***13123-திருமதி மல்லிகா சின்னசாமி :**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முசிறி தொகுதியில் தொழில்நுட்பப் பயிற்சிக்கூடம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?